11 2010

சுருக்கம்

உள்ளாட்சி அமைப்புகள் – பேரூராட்சிகள் துறை – திண்டுக்கல் மாவட்டம் – ஒட்டன்சத்திரம் பேரூராட்சியினை நகராட்சியாக தரம் உயர்த்தப்பட்டது – அனைத்து பேரூராட்சி அண்ணா மறுமலர்ச்சி திட்டத்தின் கீழ் 2010–2011 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட பணிகளை தொடர்ந்து செயல்படுத்தவும், அதற்கான நிதியை விடுவிக்கவும் அனுமதி – ஆணை வெளியிடப்படுகிறது.

---

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (பேரூ2) துறை

அரசாணை (நிலை) எண். 276 நாள்:08.11.2010

22, ஐப்பசி, திருவள்ளுவர் ஆண்டு 2041

படிக்கப்பட்டது:

1 அரசாணை (நிலை) எண். 94, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள் 06.7.2007.
2 அரசாணை (நிலை) எண். 208, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (நநி.5) துறை, நாள் 02.9.2010.
3 பேரூராட்சிகளின் இயக்குநரது கடிதம் ந.க.எண். 12002/2010/உ3, நாள் 11.10.2010.

* * * * *

மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில் அனைத்து பேரூராட்சி அண்ணா மறுமலர்ச்சி திட்டம் 2007–2008 முதல் 2010–2011 வரையிலான நான்காண்டு காலத்திற்கு செயல்படுத்தும் பேரூராட்சிகளின் பெயர்கள் வரையறை செய்யப்பட்டு ஆணையிடப்பட்டுள்ளது. அதன்படி 2010–2011 ஆம் ஆண்டில் ஒட்டன்சத்திரம் பேரூராட்சி உட்பட 139 பேரூராட்சிகளில் இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது என்று பேரூராட்சிகளின் இயக்குநர் தெரிவித்துள்ளார்.

2. மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில், திண்டுக்கல் மாவட்டம், ஒட்டன்சத்திரம் பேரூராட்சி 02.9.2010 முதல் இரண்டாம் நிலை நகராட்சியாக தரம் உயர்த்தப்பட்டு ஆணை வெளியிடப்பட்டது.

3. பேரூராட்சிகளின் இயக்குநர் மூன்றாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில், ஒட்டன்சத்திரம் பேரூராட்சியில் இத்திட்டத்தினை செயல்படுத்த திண்டுக்கல் மாவட்ட ஆட்சித்தலைவரால் பல்வேறு பணிகளுக்கு 02.6.2010–ஆம் தேதி நிர்வாக அங்கீகாரம்

வழங்கப்பட்டது என்றும் மேற்படி பணிகளுக்கு 07.7.2010 அன்று பணி உத்தரவு வழங்கப்பட்டு பணிகள் தொடங்கப்பட்டு பல்வேறு நிலைகளில் முன்னேற்றத்தில் உள்ளன என்று தெரிவித்துள்ளார்.

4. அனைத்து பேரூராட்சி அண்ணா மறுமலர்ச்சி திட்டம் செயல்படுத்தும் பேரூராட்சிகளுக்கு கீழ்க்கண்டவாறு மானிய உதவி விடுவிக்கப்படுகிறது என்று பேரூராட்சிகளின் இயக்குநர் தெரிவித்துள்ளார்:-

| | | |
|---|---|---|
| 1. | ஒட்டு மொத்த மாநில நிதி பகிர்வு மானியத்திலிருந்து 140 பேரூராட்சிகளுக்கு விடுவிக்கப்படும் மான்யம் ரூ.24.00 கோடி<br>ரூ.24.00 கோடி ÷ 140 பேரூராட்சிகள் = ஒரு பேரூராட்சிக்கு வழங்கப்படும் மான்யம் | ரூ.17.14 இலட்சம் |
| 2. | அனைத்து பேரூராட்சி அண்ணா மறுமலர்ச்சி திட்டத்தின் கீழ் வழங்கப்படும் அரசு மான்யம் ரூ.25.00 கோடி<br>25.00 கோடி ÷ 140 பேரூராட்சிகள் = ஒரு பேரூராட்சிக்கு வழங்கப்படும் மான்யம் | ரூ.17.86 இலட்சம் |
| 3. | சம்பந்தப்பட்ட பேரூராட்சிகளின் மாநில நிதி பகிர்வு தொகை (அ) அடிப்படை கட்டமைப்பு வசதிக்கான நிதிப்பற்றாக் குறையை ஈடு செய்வதற்கான பங்களிப்புத் தொகையிலிருந்து ஒதுக்கீடு செய்யப்படும் மான்யம் | ரூ.15.00 இலட்சம் |
| | **மொத்தம்** | **ரூ.50.00 இலட்சம்** |

இத்திட்டத்தின் கீழ் ஒட்டன்சத்திரம் பேரூராட்சிக்கு இதுவரை ரூ.36,51,080/– தொகை விடுவிக்கப்பட்டுள்ளது என்றும் அவர் தெரிவித்துள்ளார். ஒட்டன்சத்திரம் பேரூராட்சி 02.09.2010 முதல் இரண்டாம் நிலை நகராட்சியாக தரம் உயர்த்தப்பட்டுள்ள நிலையில் அனைத்து பேரூராட்சி அண்ணா மறுமலர்ச்சி திட்டத்தினை தொடர்ந்து செயல்படுத்தவும் மேற்படி நிதியை விடுவிப்பது குறித்தும் பேரூராட்சி இயக்குநர் உரிய ஆணை வழங்கும்படி அரசினைக் கோரியுள்ளார்.

5. பேரூராட்சி இயக்குநரது செயற்குறிப்பை அரசு பரிசீலனை செய்தது. 2010–2011ஆம் ஆண்டின் அனைத்துப் பேரூராட்சி அண்ணா மறுமலர்ச்சி திட்டப் பணிகளுக்கான பேரூராட்சிகளின் பட்டியலில் ஒட்டன்சத்திரம் பேரூராட்சி இடம்பெற்று, திட்டப்பணிகள் ஆரம்பிக்கப்பட்டு நடைபெற்று வருகிறது. இந்நிலையில், 02.9.2010 முதல் இப்பேரூராட்சி, இரண்டாம் நிலை நகராட்சியாக தரம் உயர்த்தப்பட்டுள்ளது. ஒட்டன்சத்திரம் பேரூராட்சியாக இருந்து போது துவங்கப்பட்ட திட்டப் பணிகளின் பலனை அது இரண்டாம் நிலை நகராட்சியாக தரம் உயர்த்தப்பட்ட காரணத்தால் நிறுத்துதல் முறையல்ல என்பதாலும், அனைத்து பேரூராட்சி அண்ணா மறுமலர்ச்சி திட்டப் பணிகளுக்கு நிகரான திட்டப் பணிகள் ஏதும் நகராட்சியில் இல்லை என்பதாலும், பேரூராட்சிகளின் இயக்குநரது செயற்குறிப்பை ஏற்று இதனை ஒரு சிறப்பு நிகழ்வாக கருதி, ஒட்டன்சத்திரம் பேரூராட்சியில் அனைத்து

பேரூராட்சி அண்ணா மறுமலர்ச்சி திட்டப் பணிகளை தொடர்ந்து செயல்படுத்தவும், அதற்கான நிதியை விடுவிக்கவும் பேரூராட்சிகளின் இயக்குநருக்கு அனுமதி அளித்து அரசு ஆணையிடுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

க. அஷோக் வர்தன் ஷெட்டி
அரசு முதன்மைச் செயலாளர்.

<u>பெறுநர்:-</u>
பேரூராட்சிகளின் இயக்குநர், குறளகம், சென்னை–108.
✓நகராட்சி நிர்வாக இயக்குநர், எழிலகம், சென்னை – 5.
மாவட்ட ஆட்சித் தலைவர், திண்டுக்கல்.
மண்டல நகராட்சி நிர்வாக இயக்குநர், திண்டுக்கல்.
ஆணையர், ஒட்டன்சத்திரம் இரண்டாம் நிலை நகராட்சி, திண்டுக்கல்.
சம்பளக் கணக்கு அலுவலர் (வடக்கு), சென்னை–1.
<u>நகல்:–</u>
முதன்மைச் செயலரின் தனி செயலர்,
நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, சென்னை – 9.
இயக்குநர், உள்ளாட்சி நிதித் தணிக்கை, குறளகம், சென்னை–108.
நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (அந2) துறை, சென்னை–9
நிதி (ந.நி.(ம) கு.வ./நிகு IV/ வழிவகை மற்றும் கடன்கள்) துறை, சென்னை–9.

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது./

9/11/10
பிரிவு அலுவலர்.

9/11/10